செ.வெ.எண்: 907/2017 நாள்: 04.12.2017

**எச்/29960/2017**

**மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,**
**நாகர்கோவில்.**
**நாள்: 04.12.2017**

**<u>பத்திரிகை செய்தி</u>**

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒகி புயலின் எதிரொலியாக 29.11.2017 நள்ளிரவு கடுமையான சூரைக்காற்றுடன் கூடிய கனமழை பெய்ததன் காரணமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் இதுவரை கண்டிராத கடும் சேதங்கள் ஏற்பட்டது. கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒகி புயலால் ஏற்பட்ட பாதிப்புகள் மீதான மீட்பு நடவடிக்கைகள் தொடர்பாக எடுக்கப்பட்ட நிவாரண நடவடிக்கைகள் சம்பந்தமாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இன்று காலை வீடியோ கான்பரன்சிங் மூலமாக கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவரிடம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, துரித கதியில் பணிகள் மேற்கொள்ள காணொலி காட்சி மூலம் உத்தரவு வழங்கினார்கள்.

புயல் மற்றும் கனமழை தாக்கத்தால் பல வீடுகளில் வெள்ளம் சூழ்ந்ததால் சுமார் 2391 பாதிக்கப்பட்டோர் 29 தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டு இருந்தனர். தற்போது வெள்ளம் வடிந்துள்ளதால் 24 முகாம்களில் இருந்தவர்கள் அவரவர் வீடுகளுக்கு திரும்ப சென்றுவிட்டனர். தற்போது தோவாளை வட்டத்தில் தடிக்காரன்கோணம், ஞானம், கீரிப்பாறை, வாழையத்துவயல் ஆகிய இடங்களில் உள்ள 4 முகாம்களில் மொத்தம் 201 குடும்பங்களும், கல்குளம் வட்டத்தில் 1 முகாமில் 30 குடும்பங்களும் என மொத்தம் 231 குடும்பங்கள் முகாம்களில் உள்ளனர்.

பாதிக்கப்பட்ட இடங்களில் நோய்கள் பரவாமல் தடுப்பதற்கு வட்ட அளவில் 55 நடமாடும் மருத்துவ குழுக்கள் அமைக்கப்பட்டு, சுகாதாரத்துறை மூலம் நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்கண்ட சேதங்கள் மற்றும் மேற்கொள்ள வேண்டிய அவசர நடவடிக்கைகளை கண்காணிக்க திரு.ராஜேந்திரகுமார், இ.ஆ.ப., திரு.T.K.ராமச்சந்திரன், இ.ஆ.ப., திருமதி.ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., ஆகிய 3 காண்காணிப்பு அலுவலர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோர்களால் துறை அலுவலர்கள் கொண்ட துணை குழுக்கள் அமைக்கப்பட்டு சேதமடைந்த இடங்கள் பார்வையிடப்பட்டு, சேத விபரங்கள் சேகரிக்கப்பட்டு சேதமடைந்த மரங்கள் மற்றும் மின் கம்பிகள் அப்புறப்படுத்தும் பணி உடனடியாக ஆரம்பிக்கப்பட்டு தற்போதும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சேத விபரங்களை குறித்த தகவல்களை தெரிவிக்கவும் தொடர்ந்து கண்காணிக்கவும் ஏதுவாக 24 மணி நேரமும் செயல்படும் வகையில் உரிய அலுவலர்கள் நியமிக்கப்பட்டு மாவட்ட பேரிடர் மேலாண்மை

கட்டுப்பாட்டு அறை (எண்: 1077, 231077, 9445008139 மற்றும் 9442480028) மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. சேத விபரங்கள் கணக்கெடுக்கப்படும் பணிகள் தினமும் கண்காணிப்பு அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டு எஞ்சிய பணிகள் விரைவில் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

சேதமடைந்த பயிர்களான நெற்பயிர், தென்னை, வாழை, மரவள்ளிக்கிழங்கு, ரப்பர், கிராம்பு, நல்லமிளகு, பாக்குமரம் ஆகியவற்றை கணக்கெடுக்கும் பணியானது வருவாய்த்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறையினைச் சார்ந்த அலுவலர்கள் கொண்ட வட்டார அளவிலான குழுக்கள் அமைக்கப்பட்டு, கணக்கெடுப்பு பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. இது குறித்த சேத விபரங்கள் தினமும் மேற்படி குழுக்களிடமிருந்து பெறப்பட்டு நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குடிநீர் வசதிக்காக ஊராட்சிப் பகுதிகளில் 81 ஜெனரேட்டர்களும், பேரூராட்சிப் பகுதிகளில் 50 ஜெனரேட்டர்களும், நகராட்சிகளில் 34 ஜெனரேட்டர்களும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் 6 ஜெனரேட்டர்கள் மூலமும் பொதுமக்களுக்கு குடிநீர் வசதி ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. நாகர்கோவில் நகராட்சி பகுதியில் 10000 லி. கொள்ளளவு கொண்ட குடிநீர் லாரி மூலம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தடையின்றி குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் 95% பகுதிகளில் சீரான குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

போக்குவரத்திற்கு இடையூறாக இருந்த மரங்கள் தேசிய நெடுஞ்சாலையில் 171 மரங்களும், நெடுஞ்சாலையில் 846 மரங்களும், நகராட்சி சாலைகளில் 283 மரங்களும், பேரூராட்சி பகுதிகளில் 2639 மரங்களும், ஊராட்சி பகுதிகளில் 5313 மரங்களும் வெட்டி அகற்றப்பட்டுள்ளன. 339 நெடுஞ்சாலை மற்றும் 2 தேசிய நெடுஞ்சாலை சாலைகள் 112 ஊராட்சி சாலைகள், 144 நகராட்சி சாலைகள் போக்குவரத்திற்கு இடையூறின்றி சீரமைக்கப்பட்டுள்ளன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 7500 மின்கம்பங்கள் பழுதடைந்ததில், 4108 மின்கம்பங்கள் மாற்றப்பட்டுள்ளது. மின்மாற்றிகள் 42 சேதமடைந்ததில் 15 மின்மாற்றிகள் மாற்றி பொருத்தப்பட்டுள்ளது. இப்பணிகள் 2 இயக்குநர்கள், 6 தலைமைப் பொறியாளர்கள், 7 கண்காணிப்பு பொறியாளர்கள் மேற்பார்வையில் 2000 பணியாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுவரை 40 சதவீத இடங்களுக்கு மின்வசதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் வெளிமாவட்டத்திலிருந்து கூடுதலாக 500 பணியாளர்கள் வருகை தர உள்ளனர். மேலும் மறுசீரமைப்பு பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதால் மின்சாரப் பிரச்சனை விரைவில் சீரமைக்கப்படும்.

கேரளா மாநிலம் ஆலப்புழா மாவட்டத்தில் கரை சேர்ந்த பூத்துறை, தூத்தூர், நீரோடி, களியக்காவிளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 14 மீனவர்கள், நாகப்பட்டிணம் மாவட்டத்தைச் சேர்ந்த 4 மீனவர்கள், அஸ்ஸாம் மாநிலத்தைச் சேர்ந்த 3 மீனவர்கள் உட்பட 21 மீனவர்கள் வாகனம் மூலம் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு இன்று இரவு அழைத்து வரப்பட உள்ளனர்.

33 படகுகளில் மீன்பிடிக்கச் சென்று திரும்ப வருகை தராமல் உள்ள 70 மீனவர்களை தேடும் பணியானது இந்திய கப்பல்படை, கடலோர காவல்படை மூலமாக தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் ஒவ்வொரு மீனவர் கிராம வாரியாக தகவல் கிடைக்கப்பெறாத மீனவர்கள் குறித்த விபரங்கள் சேகரிக்க சிறப்பு முகாம்கள் நடைபெற்று வருகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்.கன்னியாகுமரி மாவட்டம